DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.204 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 10 | நாள் | : | 18.07.2025 |
| பெயர் | : | போத்திராஜ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18th day of July 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ராமலிங்காபுரத்தில் வசித்து வருகிறேன். குருவிகுளம் பஸ்ஸ்டாண்ட் அருகில் பழக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. குமார், லட்சுமணத்துரையை தெரியாது. சம்பவம் நடந்த ஒருவாரம் கழித்து சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். கோவிலுக்கு அருகே சம்பவம் நடந்ததாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் கடந்த 11.08.2021 மாலை 5.30 மணிக்கு நான் எனது பழக்கடை முன்பு நின்று கொண்டிருந்தபோது TN D0079

என்ற இண்டிகா காரில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் கடைவீதியில் அலங்கார வளைவு அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கி நின்றிருந்தபோது மாலை 5.45 மணிக்கு மலையடிப்பட்டியைச் சேர்ந்த நாகராஜன் ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றும் அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆட்டோவிற்குள் மலையடிப்பட்டியைச் சேர்ந்த லட்சுமணத்துரையையும், அவரது மகளும் இருந்தார் என்றும் அவருடன் ஒரு பெண்ணும் வந்தார் என்றும் ஆட்டோவில் வந்தவர்களை பார்த்ததும் காரில் இருந்த மூவரும் தேவிடியா மகனே என்று அசிங்கமாக யேசிக் கொண்டே கார் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர் என்றும் அப்போது லட்சுமணத்துரையின் அண்ணன் ராமராஜனும் இளவரசியும் இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்தனர் என்றும் காரில் வந்தவர்கள் அக்ரஹாரம் தெருவில் வைத்து ஆட்டோவை மறைத்து லட்சுமணத்துரையை வெட்டிப்போட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும் காரில் வந்தவர் குமார் என்றும் அவரது மனைவி ராஜேஸ்வரி என்றும் காரை ஓட்டியவர் தேசிங்குராஜா என்றும் குமாரின் சகோதரியை லட்சுமணத்துரை அழைத்து வந்துவிட்டதால் வெட்டிக் கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரியல்ல அதனால் எதிரிகளுக்கு பயந்து அவர்களை காப்பாற்ற பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.18 17:37:53 +0530

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி

நாள் 18.07.2025

## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.204 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 9 | நாள் | : | 18.07.2025 |
| பெயர் | : | மூக்காண்டி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18th day of July 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது குருவிகுளத்தில் வசித்து வருகிறேன். ஹோட்டல் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. குமார், லட்சுமணத்துரையை தெரியாது. சம்பவம் நடந்த மறுநாள் சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். கோவிலுக்கு அருகே சம்பவம் நடந்ததாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் கு.வி.**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் கடந்த 11.08.2021 மாலை 5.30 மணிக்கு நான் எனது ஹோட்டல் முன்பு நின்று கொண்டிருந்தபோது TN D0079

என்ற இண்டிகா காரில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் கடைவீதியில் அலங்கார வளைவு அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கி நின்றிருந்தபோது மாலை 5.45 மணிக்கு மலையடிப்பட்டியைச் சேர்ந்த நாகராஜன் ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றும் அவரை எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆட்டோவிற்குள் மலையடிப்பட்டியைச் சேர்ந்த லட்சுமணத்துரையையும், அவரது மகளும் இருந்தார் என்றும் அவருடன் ஒரு பெண்ணும் வந்தார் என்றும் ஆட்டோவில் வந்தவர்களை பார்த்ததும் காரில் இருந்த மூவரும் தேவிடியா மகனே என்று அசிங்கமாக யேசிக் கொண்டே கார் பின்தொடர்ந்து விரட்டிச் சென்றனர் என்றும் அப்போது லட்சுமணத்துரையின் அண்ணன் ராமராஜனும் இளவரசியும் இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்தனர் என்றும் காரில் வந்தவர்கள் அக்ரஹாரம் தெருவில் வைத்து ஆட்டோவை மறைத்து லட்சுமணத்துரையை வெட்டிப்போட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டதாக தெரிந்து கொண்டேன் என்றும் காரில் வந்தவர் குமார் என்றும் அவரது மனைவி ராஜேஸ்வரி என்றும் காரை ஓட்டியவர் தேசிங்குராஜா என்றும் குமாரின் சகோதரியை லட்சுமணத்துரை அழைத்து வந்துவிட்டதால் வெட்டிக் கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரியல்ல அதனால் எதிரிகளுக்கு பயந்து அவர்களை காப்பாற்ற பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.18 17:38:02 +0530

# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.204 /2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 8 | நாள் | : 18.07.2025 |
| பெயர் | : குமார் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18th day of July 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சாயமலை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குருவிகுளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது கடந்த 12.08.2021 ம் தேதி குருவிகுளம் காவல் ஆய்வாளர் எனக்கு அலைபேசி மூலம் தெரிவித்த தகவலின்பேரில் நானும், கிராம உதவியாளரும் காலை 3.30 குருவிகுளம் காவல் நிலையம் சென்றபோது அங்கு எதிரி குமார் என்பவர் இருந்தார் ஆய்வாளரும் இருந்தார். நான் சென்ற பின்னர் என் முன்னிலையில் குமார் வாக்குமூலம் கொடுத்தார். என் முன்பாக ஆய்வாளர் சொல்லச் சொல்ல காவலர் ஒருவர் கணினியில் தட்டச்சு செய்தார். நிலையத்தில் வைத்து இரத்தக் கறை படிந்த ஒரு சட்டையை காண்பித்தார். அவனிக்கோனேந்தல் கண்மாயின் ஒரு மடையில் ஒரு அரிவாளை போட்டு வைத்திருப்பதாகவும் அதை

எடுத்துத் தருவதாகவும் சொன்னார். அதன்பின்னர் காலை 6 மணிக்கு நானும், கிராம உதவியாளரும், எதிரியும் ஆய்வாளருடன் சென்று அவனிக்கோனேந்தல் கண்மாய் மடையிலிருந்து எடுக்கப்பட்ட அரிவாளுக்கு ஒரு அத்தாட்சி தயாரித்தார். நிலையத்தில் வைத்து எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகும். காலை 6 மணிக்கு கண்மாய் மடையில் வைத்து கைப்பற்றப்பட்ட அரிவாளுக்கான அத்தாட்சி அ.சா.ஆ.9 ஆகும். பின்னர் குமார் ஸ்டேஷன் முன்பு இருந்த ஒரு இண்டிகா காரை அடையாளம் காட்டி TN76-D0079 காரில் வந்ததாக கூறினார். நிலையத்தில் வைத்து இரத்தம் பற்றிய சட்டையை கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆகும். நிலையத்தில் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய சட்டை சா.பொ.1 ஆகும். கண்மாய் மடையிலிருந்து எடுத்து ஆஜர்படுத்திய அரிவாள் சா.பொ.2 ஆகும். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

எங்கள் அலுவலகம் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால் 200 மீட்டர் தொலைவில் உள்ளது. நான் பணிபுரிந்த பல காவல் நிலைய எல்லைகுட்பட்ட பகுதிகளில் என்னை சாட்சியாக குறிப்பிடுவார்கள் என்று நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. நான் நிலையம் செல்லும் முன்பாகவே குமார் அங்கிருந்தார். வெள்ளை நிற இண்டிகா காரும் காவல் நிலையத்திற்கு முன்பு இருந்தது. காவல் நிலையத்திற்கு காரை குமார் ஓட்டி

வந்ததாக ஆய்வாளர் என்னிடம் கூறவில்லை. நான் காவல் நிலையத்தின் முன்பாக நிறுத்தியிருந்த காரைப்பற்றி நான் போலீசாரிடம் விசாரிக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் சுமார் 2 மணி நேரம் இருந்தேன். பின்னர் சாட்சி கூறுகிறார் 2 மணி நேரத்திற்கும் மேலாக இருந்தேன். நாங்கள் மேற்கொள்ளும் அன்றாட பணிகளை நாட்குறிப்பில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலருக்குரிய கடமைகள் என்னவென்றே தெரியாமல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து இரண்டு கையெழுத்துப் போட்டேன். ஒரு தாள் கையால் எழுதப்பட்டிருந்தது மற்றொரு தாள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. ஆய்வாளர் தட்டச்சு செய்யவில்லை. தட்டச்சு செய்த நபர் பெயர் ஞாபகமில்லை. கணினியில் தட்டச்சு செய்த நபரைபற்றி நான் விசாரிக்கவில்லை. தட்டச்சு செய்த காவலர்தான் கைப்பட அத்தாட்சியை எழுதினார். கிராம நிர்வாக அலுவலகம் மற்றும் காவல் நிலையம் பொதுமக்கள் நடமாட்டம் அதிக உள்ள பகுதி என்றால் சரிதான். என்னை மட்டும் சாட்சியாக அழைத்துக் கொள்வதற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உண்டா என்றால் இல்லை. நான் அவனிக்கோனேந்தலுக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்றேன் போலீசார் தனியே சென்றார்கள். காவல் நிலையத்திலிருந்து அவனிக்கோனேந்தலுக்கு 3 கி.மீ. தொலைவில் உள்ளது. அவனிக்கோனேந்தலுக்கு தனியே கிராம நிர்வாக அலுவலர் இருக்கிறார். நாங்கள் புறப்படும்போதே அவனிக்கோனேந்தலுக்கு செல்லவுள்ளோம் என்று தெரியும்.

நான் புறப்படும் முன்பு அந்த ஊர் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. அவனிக்கோனேந்தல் கண்மாய் அருகில் கையால் எழுதினார்கள். அங்கு ஆய்வாளர் எழுதவில்லை. நான் அன்றைய தினம் ஏழாயிரம் பண்ணையில் உள்ள என் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன். குருவிகுளத்திலிருந்து ஏழாயிரம் பண்ணை சுமார் 30 கி.மீ. தொலைவில் உள்ளது. பணிபுரியும் இடத்தில்தான் தங்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். ஆய்வாளர் எனக்கு அலைபேசியில் அழைக்கும்போதே குமார் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவிருக்கிறார் என்றும் அரிவாள் மற்றும் சட்டையை எடுத்துத்தரப்போவதாகவும் அதை பதிவு செய்ய உடனிருக்க வேண்டுமென்றும் அழைத்தார் என்றால் சரிதான். நான் விதிமுறைகளுக்கு முரணாக பணியாற்றும் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதைப்போல் காலை 3.30 மணிக்கு காவல் நிலையம் சென்றதாக கூறுவதும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கூறுவதும் அதனடிப்படையில் கண்மாய் மடைக்குச் சென்று அரிவாளை எடுத்து ஆஜர்படுத்தியதாக கூறுவதும் பின்னர் நிலையம் திரும்பி காரை அடையாளம் காட்டியதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னிடம் தனியே வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.18 17:38:10 +0530